2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***17111—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழக மக்களுக்கு நல்வாழ்வு தருவதையே தனது இலட்சியமாக்கிக் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். கண்ணை மூடுகின்ற கடைசி நிமிடம் வரை இந்த மண்ணை ஆண்டு, தமிழக மக்களின் கண்ணிலும், கருத்திலும், கையளவு இதயத்திலும் இடம் பிடித்த வெற்றித் தாயின் விவேக நல்லாட்சியில், பண்ருட்டியிலிருந்து எத்திசை சென்றாலும் 30 கிலோ மீட்டர் கடந்துதான் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனது தொகுதியிலிருந்து விழுப்புரத்திற்கோ, கடலூருக்கோ, நெய்வேலிக்கோ, சிதம்பரத்திற்கோ அல்லது*

[2019 ஜூலை 11

விருத்தாசலத்திற்கோ சென்றுதான் மாணவர்கள் உயர் கல்வி பயில வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. பெண் பிள்ளைகள் +2 படித்தவுடன் அவர்களது படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். சுமார் 100 கிராமங்கள் சார்ந்த மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் பண்ருட்டி நகரில் அக்கிராமவாழ் மக்களின் பிள்ளைகளின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு போதுமான இடவசதி உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய கடலூர் மாவட்டத்திலே, 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒரு அரசு உதவிபெறும் கல்லூரி, ஒரு பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஆகியவை சேர்த்து மொத்தம் 6 கலைக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் பார்க்கும்போது, ஏற்கெனவே, அந்தக் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில், உறுப்புக் கல்லூரிகளில் 144 இடங்களும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 38 இடங்களும் காலியாக இருக்கின்றன. இரண்டு அரசு கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடத்தைவிட, இன்றைக்கு அரசாணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மாணவர்கள் சேர்க்கைக்காக 20 சதவிகிதம் கூடுதல் இடம் ஒதுக்கப்பட்டதில், 258 மாணவர்கள் 2 கலைக் கல்லூரிகளிலுமே சேர்ந்திருக்கிறார்கள். மீதம் உள்ள 2 கல்லூரிகளில் 108 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, கடலூர் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் படிப்பதற்கான இட ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, எதிர்வரும் காலகட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழி தொடரும் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜுலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தொகுதிக்கு எதைக் கேட்டாலும் இன்முகத்தோடு தருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். மாபெரும் மக்கள் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான திட்டமான மாவட்டத்திற்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி என்பதை நிறைவேற்றும் வகையில் தற்போது பண்ருட்டியில் போதுமான இட வசதிகள் உள்ள அறிஞர் அண்ணா பொறியியல் பல்கலைக் கல்லூரி வளாகத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றினை ஏற்படுத்தித் தந்து தொகுதிவாழ் மக்களின் நீண்டநாள் கனவை நினைவாக்கிட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் என்பது உயர் கல்வித் துறையின்கீழ் வரவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனை செய்து அதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து அதன் பிறகு முடிவெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்த மாவட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது இன்றைக்கு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கே கட்டுமானப் பணிகளுக்கு, அதாவது கட்டட வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளும் வகையில் உயர் கல்வித் துறை பல்வேறு நிகழ்வுகளை அங்கே நடத்தியிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய பரிசீலனையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

85—

நெல் கொள்முதல் நிலையம்

***28755—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, தூசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கூடுதலாக புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள செய்யாறு தொகுதி, தூசி கிராமத்தில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், உறுப்பினர் அவர்கள் வேறு ஏதேனும் கூடுதலாகக் கேட்கிறாரா என்று தெரியவில்லை. அப்படி உறுப்பினர் அவர்கள் கேட்கும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி தேவதை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி, அறிவுத் திறனில்*